ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA

මගේ අංකය
எனது இல.
My No.

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date

28. 05. 2021

வைத்தியர் அசேல குணவர்தனா அவர்கள்,
சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம்,
சுகாதார அமைச்சு,
கொழும்பு.

<u>கோவிட் – 19 ஊசியேற்றல் செயற்றிட்டத்திற்கு முன்னுரிமை வழங்குவது தொடர்பாக</u>

கோவிட் தொற்று ஏற்பட்டுள்ள இக்காலப்பகுதியில் மிகவும் ஆபத்தான நிலைமைகளுக்கு முகங்கொடுத்து இத்தொற்று நோயிலிருந்து இலங்கை மக்களை பாதுகாக்கும் நோக்கில் தாங்கள் உட்பட எல்லா தரப்பினரும் மேற்கொள்கின்ற பணிகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மிகவும் உயர்ந்த மட்டத்தில் மதிக்கின்றது.

கோவிட்டை கட்டுப்படுத்துவதில் சுகாதார சேவையில் கீழ்மட்ட உத்தியோகத்தர்கள் தொடக்கம் மேல்மட்ட உத்தியோகத்தர்கள் வரையும் தமது சேவையினை சிறப்பாக மேற்கொள்கிறார்கள் என்பதை இலங்கை மனித உரிமைகள் ஆனைக்குழு கவனத்தில் கொண்டுள்ளது.

அவ்வாறே கடந்த சில தினங்களில் கோவிட் நிலைமையை கட்டுப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளும் ஒரு செயற்பாடாக அரசினால் அஸ்ட்ரோனிக்கா, ஸ்புட்னிக்v மற்றும் சய்னோபாம் போன்ற பல்வேறு தடுப்பூசிகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இந்த தடுப்பூசியினை வழங்கும் போது நியாயமானதாகவும், வெளிப்படைத்தன்மை பொருந்தியதாகவும் அச்செயற்பாட்டினை மேற்கொள்வதில்லையென சுகாதார சேவை மற்றும் ஏனைய தரப்பினரும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகளை செய்துள்ளனர்.

இதனால் இச்செயற்பாட்டின் போது உண்மையாகவும் ,நேரடியாகவும் கோவிட் தொற்று நோயாளர்களுடன் தொடர்புபடுகின்ற மற்றும் அதன் மூலம் தொற்றுக்கு ஆளாகக் கூடிய குழுக்களுக்கு முன்னுரிமையை வழங்குவது பொருத்தமானது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கருதுகின்றது.

பிரதான அலுவலகம் Head Office: 14, ஆர்.ஏ. டீ. மெல் மாவத்தை, கொழும்பு - 04. 14, R. A. De Mel Mawatha, Colombo - 04.
தலைவர் Chairperson: 011-2505451
தொலைநகல் Fax: 011-2505541 / 74
மின்னஞ்சல் e-mail: sechrc@gmail.com
தொலைபேசி Telephone: 94 -11- 2505580 / 81 / 82
செயலாளர் Secretary: 011-2505521
துரித அழைப்பு Hotline: 1996
இணையம் Web: www.hrcsl.lk

இதனால் வகிக்கும் பதவிகளையும் வேறு கருதுகோள்களையும் கருத்திற் கொள்வது இந்த நோயை கட்டுப்படுத்துவதற்கு நேரடியாக பங்களிப்பை வழங்குகின்ற குழுக்கள் மற்றும் அவ்வாறு பங்களிப்பினை வழங்குபவர்களுடன் வசிக்கின்ற வயதுவந்தவர்களுக்கும், நோய் பரவுகின்ற பிரதேசங்கள் மற்றும் குழுக்களையும் அவதானத்திற் கொண்டு மிகவும் நியாயமானதும்,பொருத்தமானதுமான வழிமுறையொன்றினை கையாழுவது சாலவும் பொருத்தமானது என நான் நம்புகிறேன்.

அதற்காக உங்களது அமைச்சு காட்டுகின்ற அவதானம் காரணமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு வருகின்ற முறைப்பாடுகளையும் விமர்சனங்களையும் குறைத்துக் கொள்ளலாம் என நம்புகிறேன்.

எனவே இதற்காக பொருத்தமான முன்னுரிமை பட்டியலொன்றையும் நடைமுறைக்கு சாத்தியமான வழிமுறையொன்றினையும் உருவாக்கி அதனை விளம்பரப்படுத்தி 2021.06.15 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை மனித உரிமைகள் ஆணக்குழுவுக்கு அறிவிப்பது பொருத்தமானதாகும்.

இந்த அறிவித்தலானது 1996 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் அடிப்படையிலானது என்பதை கருணையுடன் கவனத்திற் கொள்ளவும்.

கலாநிதி ஜகத் பாலசூரிய
தவிசாளர்,
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.